**DEPOSITION OF WITNESS**
**In the Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 81/2018.** | | |
| **PW/DW/CW** | : | **PW2** | | |
| **Name** | : ˙ஸ்டெல்லாகண்ணகி | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : சகாதேவன் | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused present .)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 23.08.2023

---

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது திருப்பூரில் வசித்து வருகிறேன். எதிரியை தெரியும். புகார்தாரர் எனது கணவர் ஆவார். அரசு தரப்பு சாட்சிகளை எனக்கு தெரியும். கடந்த 2018ம் ஆண்டு சம்பவம் நடந்தது. நான் சம்பவத்தின்போது உசிலம்பட்டி சமத்துவபுரத்தில் எனது கணவருடன் குடியிருந்து வந்தேன். சம்பவத்தன்று இரவு 07:00 மணியளவில் நான் எனது வீட்டு வாசலில் உள்ள தெருக்குழாய் அருகே அமர்ந்திருந்த போது எனது கணவர் அவர் நடத்திவரும் கடையில் இருந்தார். கடையும், வீடும் அருகருகே உள்ளது. எனது கணவர் அன்று மது அருந்தியிருந்தார். என்னிடம் எனது கணவர் அடிக்கடி சந்தேகப்பட்டு தகராறு செய்வார். கடையில் அவர் மதுபாட்டில்களையும் வைத்து விற்பனை செய்வது வழக்கம். அவற்றை என்னையும் கடையில் இருந்து வாடிக்கையாளருக்கு எடுத்து கொடுக்க சொல்வார். நான் செய்யமாட்டேன் என்று சொன்னதால் அன்றையதினம் நான் தெருக்குழாய் அருகே அமர்ந்திருந்த போது என்னிடம் தகராறு செய்து என்னை அடித்தார். எனது சத்தம் கேட்டு தெருவில் உள்ளவர்கள் எனது கணவரை விலக்கிவிட்டார்கள். எனது கணவருக்கு வயிற்றில் ரத்த காயம் ஏற்பட்டிருந்தது. அவர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார். நானும் மருத்துவமனைக்கு சென்றேன். எனது கணவர் எதிரி மீது எதற்காக புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி**

**வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

**2.** கடந்த 05.01.2018ம் தேதி இரவு 08:00 மணியளவில் எனது கணவர் வழக்கம் போல என்னிடம் தகராறு செய்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரி தவம் எனது கணவரை அசிங்கமாக பேசி, அவர் மறைத்து வைத்திருந்த சிறிய கத்தியால் எனது கணவரின் இடதுபக்க விலாவில் குத்தி ரத்த காயத்தை ஏற்படுத்தியதாகவும், நான் சாட்சிகளுடன் சேர்ந்து எதிரியை விலக்க முயன்ற போது எதிரி கொலை மிரட்டல் விடுத்ததாகவும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது நான் எனது கணவருடன் சேர்ந்து வாழாத காரணத்தால் எதிரிக்கு ஆதரவாகவும் உண்மைக்கு புறம்பாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி ˙தரப்பு குறுக்கு விசாரணை:**

**3.** தற்போது நான் எனது மகள் மற்றும் மகனுடன் திருப்பூரில் வசித்து வருகிறேன். எனது மகன் திருப்பூர் சிக்னா கல்லூரியில் பிகாம்சிஏ முதலாம் ஆண்டு படிக்கிறார். சம்பவத்திற்கு பின்பு நான் திருப்பூரில் சென்று நான் அங்கு வசித்து வருகிறேன். எனது கணவருக்கு நான் 4ம் மனைவி ஆவேன். எனது கணவர் எங்கள் வீட்டில் வாடகைக்கு இருந்த போது என்னுடன் தப்பாக இருந்ததால் என்னை அவருடன் அழைத்து வந்துவிட்டார். அவர் வந்ததில் இருந்தே என்னை எனது கணவரும், அவரது குடும்பத்தாரும் கொடுமைபடுத்தி வந்தார்கள். அதன்பின்பு என் கணவருடன் வாழமுடியாது என்பதால் திருப்பூரில் சென்று வேலை செய்து குழந்தைகளுடன் வசித்து வருகிறேன். திருப்பூர் சென்றபின்பு என் கணவர் வந்து என்னை பார்க்கவில்லை.

S.d./ Stellakannagi

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.